www.agaram.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணை பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 5th Term Examination - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| நாடகமும் அரங்கியலும் - I<br>Drama & Theater - I | Three Hours<br>Gr. 13 (2022) | 58 | T | I |

### பகுதி – I

➢ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும், சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.**

01. மேல்வருவனவற்றுள் படைப்பாளியின் துணையின்றி நயக்க கூடிய கலைவடிவம்.
    1) நாடகம் 2) நடனம் 3) இசை 4) இலக்கியம் 5) பலே (…….)

02. 'கலை' என்பதற்கான Arts என்ற ஆங்கிலச் சொல்லின் நேரடி கருத்து
    1) அழகு 2) ஆற்றல் 3) செம்மை 4) நுட்பம் 5) ஒழுங்கு (…….)

03. பின்வரும் கலைகளில் வாய்ச்சொற் கலையாகவும், ஆற்றுகைக் கலையாகவும் கொள்ளக்கூடியது.
    1) வாய்ப்பாட்டிசை 2) நடனம் 3) நாடகம் 4) ஓவியம் 5) கட்டடம் (…….)

04. "இந்தியக் கலை அளிக்கும் அழகு, வெறும் இயயற்கையானதும் அன்று, செயற்கையானதும் அன்று ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டது" எனக் கூறியவர்.
    1) அரவிந்தர் 2) மாசேதுங் 3) இராமதாஸ்முகர்ஜி
    4) ஆனந்தக் குமாரசாமி 5) இரவீந்திரநாத் தாகூர் (…….)

05. மேல்வருவனவற்றில் ஆற்றுகைக் கலைகளின் இயல்பு அல்லாதது.
    1) உணர்ச்சிகள் பரிமாறப்படுவது
    2) உறவுகள் தொடர்ச்சியாகப் பேணப்படுவது
    3) உணர்வுகளை தட்டியெழுப்புவது
    4) தொழில் நுட்பத்தில் அதிகம் தங்கி நிற்பது. (…….)

06. 'ருக்மணி அருண்டேல்' தொடர்புபடுகின்ற கலைவடிவம்
    1) நடனம் 2) இசை 3) நாடகம் 4) ஓவியம் 5) இலக்கியம் (…….)

07. பின்வரும் கூற்றுக்களில் 'அரங்கு' தொடர்பான பொருத்தமற்ற கூற்று.
    1) ஆற்றுகை நிகழும் இடம்
    2) ஆற்றுகைக்குரிய செயற்தொகுதி
    3) உறைநிலையான கட்டடம்
    4) பார்த்தலுக்குரிய வெளி
    5) ஆற்றுவோர் பார்ப்போர் இணையும் இடம் (…….)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

08. இசை நாடகங்களில் இசையானது.
    1) பின்னணியாக இருக்கும்.
    2) ஆடலுக்கு உதவும்
    3) உணர்வை வெளிப்படுத்தும்
    4) ஆற்றுகையின் அடிப்படை மூலகமாக இருக்கும்
    5) பின்னோக்கு இசையாகத் தொழிற்படும் (…….)

09. நாடக ஆற்றுகையில் 'பெண்கள்' ஆற்றுவோராக செயற்பட்ட தொன்மையான நாடக மரபு
    1) கிரேக்க மரபு 2) இந்திய மரபு 3) சீன மரபு
    4) எகிப்திய மரபு 5) உரோமைய மரபு (…….)

10. 'வில்லுப்பாட்டுக் கலையின்' பிரதான அம்சம்.
    1) பாடல் 2) நடிப்பு 3) நகைச்சுவை
    4) வில்லிசைத்தல் 5) கதை சொல்லுதல் (…….)

11. பின்வருவனவற்றில் 'கமராவின் நகர்வு' மூலமாக கதை சொல்லும் கலை வடிவம்.
    1) வானொலி நாடகம் 2) சினிமா 3) ஒளிப்படம்
    4) விவரணம் 5) கதை சொல்லல் (…….)

12. மேலைத்தேய நடிப்பு முறையில் அதிக முக்கியத்துவம் பெறுவது
    1) சொல்லாடல் 2) பாடல் 3) உடல் மொழி
    4) முத்திரைகள் 5) ஊமம் (…….)

13. நடிப்பில் 'அந்நியமாதல்' என்ற சிந்தனையை முன்வைத்த மேலைத்தேய நாடக ஆசிரியர்.
    1) மேயர்ஹோல்ட் 2) ஸ்ரனிஸ்லவஸ்கி 3) குறொட்டோவ்ஸ்கி
    4) பிரக்ட் 5) பீற்றர் புறூக் (…….)

14. பின்வரும் ஈழத்து நாடக ஆசிரியர்களில் 'கவிதைகளில்' நாடகங்களை எழுதியவர்கள்
    1) குழந்தை சண்முகலிங்கம், க. கணபதிப்பிள்ளை 2) முருகையன், அம்பி
    3) ச. சுந்தரலிங்கம், இ. சிவானந்தன் 4) மு. நித்தியானந்தன், மாஹாகவி
    5) அ. ந. கந்தசாமி, முத்துலிங்கம் (…….)

15. பின்வருவோரில் உலகப் புகழ் பெற்ற நாடக ஆசிரியராக கொள்ளப்பட முடியாதவர்
    1) ஷேக்ஸ்பியர் 2) இப்ஸன் 3) ஸ்ரனிஸ்லவஸ்கி
    4) அன்ரன் செகோவ் 5) பேனாட்ஷோ (…….)

16. கிரேக்கத்தில் 'டித்றாம் பாடல்கள்' இசைக்கப்பட்ட போது பயன்படுத்தப்பட்ட இசைக்கருவி.
    1) எக்காளம் 2) இரட்டைப் புல்லாங்குழல் 3) முரசு
    4) பியானோ 5) வயிர் (…….)

17. 'பண்டைத் தமிழ் சமூகத்தில் நாடகம்' என்ற நூலை எழுதியவர்.
    1) குழந்தை ம. சண்முகலிங்கம் 2) பேரா. சி. மௌனகுரு 3) பேராசிரியர் கா. சிவத்தம்பி
    4) பேரா. இராமானுஜம் 5) கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை (…….)



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

18. கிரேக்க அரங்குடன் தொடர்புபடும் பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
    அ) நடிகர்கள் வேடமுகம் அணிந்து நடித்தனர்.
    ஆ) பெண் பாத்திரங்களை பெண்களே ஏற்றனர்.
    இ) நடிகர் உயரமான பாதணி அணிந்தனர்.
    ஈ) ஒரு நடிகர் ஒன்றுக்கு மேற்பட்ட வகிபாகங்களை ஏற்றார்.
    உ) நடிப்பிலே ஊமம் பயன்படுத்தப்பட்டது.
    இக்கூற்றுக்களுள் கிரேக்க நடிகர்களுடன் தொடர்புடைய கூற்றுக்கள்.
    1) அ, ஆ, இ    2) அ, ஆ, உ    3) அ, இ, உ
    4) இ, ஈ, உ    5) அ, இ, ஈ    (…….)

19. கிரேக்க அரங்கில் ‘கோரஸ்’ ஆடுகளத்தில் பிரவேசிப்பது.
    1) ஸ்கெனே கட்டட முன் கதவுகளால்    2) பார்ப்போரின் படி வரிசைகளால்
    3) பரடொஸ் (Pavados) எனப்படும் பகுதியினால்    4) பலிப்பீடப் பகுதியினால்
    5) ஸ்கெனேயின் ஒரு பகுதியினால்    (…….)

20. பின்வருவனவற்றில் சோபோகிளிஸ் எழுதிய சற்றயர் நாடகம்.
    1) அஜாக்ஸ் (Ajax)    2) அகமெம்னன் (Agamemnon)    3) ரக்கேஸ் (Trackars)
    4) எலெக்ரா (Electra)    5) மீடியா (medea)    (…….)

21. “உண்மையான மகிழ் நெறி என்பது ஒரு தேசிய இனத்தின் மடமைகளையும் குறைபாடுகளையும் பேசுகின்ற சித்திரம்” எனக் கூறியவர்.
    1) அரிஸ்டோட்டில்    2) வோல்டயர்    3) மெனான்டர்
    4) செனேக்கா    5) விற்றூவியஸ்    (…….)

22. பின்வருவோரில் கற்பித மனோரதிய வாத நாடக ஆசிரியராகக் கொள்ள முடியாதவர்.
    1) கத்தே    2) அலெக்சாண்டர் டுமாஸ்    3) ஷில்லர்
    4) யூலியன் பெக்    5) லெங்கின் ஷ்லார்ட்ஸ்    (…….)

23. பின்வரும் கூற்றுக்களை கருதுக.
    அ) பார்ப்போரை வியப்புக்குள்ளாக்கும் கதைப்போக்கு
    ஆ) மேடையில் கவர்ச்சிகரமான அசைவுகளைச் செய்தல்
    இ) நிலமையும் பாத்திரமும் நன்கு விளக்கப் பெறுதல்
    ஈ) அதிகளவு உணர்ச்சிகளைக் கொண்டு நடித்தல்
    உ) சாதாரண வாழ்வின் துன்பங்களை வெளிப்படுத்துதல்
    இவற்றில் மிகைப்பாட்டு வாத அரங்குடன் தொடர்புடைய கூற்றுக்கள்
    1) இ, ஈ, உ    2) அ, ஆ, ஈ    3) அ, இ, உ
    4) ஆ, ஈ, உ    5) அ, ஆ, இ    (…….)

24. இயற்பண்பு வாத நாடக மரபின் தொடக்கமாகக் கொள்ளப்படும் ‘எமிலி ஜோலா’ எந்த நாட்டை சேர்ந்தவர்.
    1) அமெரிக்கா    2) போலந்து    3) ஜேர்மனி    4) நோர்வே    5) பிரான்ஸ்
    (…….)

25. பின்வரும் நாடகங்களில் ஹென்றிக் இப்பனின் நாடகம் அல்லாதது.
    1) ஒருபாவையின் வீடு    2) செறிப்பழத் தோட்டம்    3) சமூகத்தின் தூண்கள்
    4) தலைமை கட்டடக்காரன்    5) மக்களின் பகைவன்    (…….)



agaram.lk

26. பின்வருவனவற்றில் 20ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற ‘யதார்த்த விரோத அரங்கு’ அல்லாதது.
   1) அபத்த அரங்கு 2) மிகைப்பாட்டு அரங்கு 3) காவிய அரங்கு
   4) குரூர அரங்கு 5) வறுமை அரங்கு (…….)

27. நடிகன் அரங்கில் வாழ்வனுபவங்களைப் பெற்று பாத்திரமாக வாழ வேண்டுமென்ற கருத்து நிலையை கொண்டிருந்த நெறியாளர்.
   1) பேத்தொல்ட் பிரக்ட் 2) மேயஹோல்ட் 3) ஸ்ரனிஸ்லவஸ்கி
   4) பீற்றர் புறூக் 5) சாமுவேல் பெக்கட் (…….)

28. ‘ஸ்வப்ன வாசவதத்த’ என்ற நாடகத்தினை எழுதியவர்.
   1) காளிதாசர் 2) பாசர் 3) சூத்ரகர் 4) ஸ்ரீ ஹர்ஷர் 5) பாடினியர்
   (…….)

29. சமஸ்கிருத அரங்கில் ‘முக்கோண அரங்காக’ கருதப்படுவது.
   1) திரியஸ்ட அரங்கு 2) விக்கிருஸ்ட அரங்கு 3) சதுஸ்ட அரங்கு
   4) அவர அரங்கு 5) சிரேஷ்ட அரங்கு (…….)

30. வடமொழி நாடகங்களின் கதைப்பின்னலில், கதையின் நாயகனுக்காக, தனக்குப் பயனின்றி கற்பனையில் படைக்கப்படும் பாத்திரம்
   1) பிந்து 2) பதகா 3) பிரகரி 4) பீஜ 5) கார்ய (…….)

31. பின்வரும் சமஸ்கிருத நாடகங்களில் கதையின் நாயகன் அல்லது நாயகியின் பெயரைக் கொண்டிராத நாடகம்.
   1) அபிக்ஞான சாகுந்தலம் 2) இரத்தினாவளி 3) ஸ்வப்ன வாசவ தத்த
   4) விக்கிரமோர்வசியம் 5) மிருச்சகடிகம் (…….)

32. துஷ்யந்தனின் அரசசபையில், துஷ்யந்தன் சகுந்தலையை தனக்கு தெரியாது என்று கூறி மறுதலிக்கும் போது பார்ப்போர் மனதில் தோன்றும் இரசம்.
   1) ஹாஸ்ய 2) ரௌத்திர 3) பயானக
   4) கருணா 5) பீபத்ச (…….)

33. கோடை நாடகம் முதன்முதலாக எழுதப்பட்ட நோக்கம்.
   1) மேடையேற்றுவதற்கு 2) வாசிப்பதற்கு 3) கவிதையாக படிப்பதற்கு
   4) வானொலியில் ஒலிப்பரப்புவதற்காக 5) நூலாக்குவதற்காக (…….)

34. காடேறித் திருவிழாவில் ‘காடேறியாக’ வேடமிடுபவர் வைத்திருக்கும் கைப் பொருள்.
   1) வாள் 2) சூலம் 3) சுளகு
   4) உலக்கை 5) வில், அம்பு
   (…….)

35. ஜப்பானில் நாடகத்தின் தோற்றத்துக்கு காரணமாகக் கொள்ளப்படுகின்ற சடங்கு.
   1) டயோனீசியஸ் விழா 2) திருப்பலி சடங்கு 3) சம்போஷா சடங்கு
   4) களவேள்வி 5) லெனே விழா (…….)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

36. பின்வரும் கூற்றுக்களை கருதுக.

அ) அடிநிலை மக்களின் வாழ்க்கை முறையை வெளிக்காட்டல்

ஆ) சாதி முறையினை வலுவிழக்கச் செய்தல்.

இ) மன்னர்களை மகிழ்வித்தல்.

ஈ) குலமரபின் அடையாளத்தை மேம்படுத்தல்.

உ) மனிதனின் போலித்தனங்களை அம்பலப்படுத்துதல்

இக்கூற்றுக்களில் விஜய நகர நாயக்க மன்னர் கால அரங்கு சார்ந்த நோக்கங்களாக கொள்ளப்படக் கூடியவை

1) அ, ஆ, இ    2) அ, இ, உ    3) ஆ, இ, ஈ

4) அ, ஆ, உ    5) இ, ஈ, உ    (…….)

37. பின்வருவனவற்றில் 'புலசந்தோர்' என்னும் கதை சொல்லும் பாத்திரத்தினை பயன்படுத்தாத கூத்து மரபு.

1) வடபாங்கு    2) காத்தவராஜன்    3) தென்பாங்கு

4) வாசாப்பு    5) யாழ்ப்பாண தென்மோடி    (…….)

38. படத்தில் காட்டப்பட்டவரால் எழுதப்பட்ட நாடகம்.



1) வெண்கட்டி வட்டம் (Chalk cirele)

2) ஒரு பாவையின் வீடு (A doll's house)

3) கிங் லியர் (King Liar)

4) சம்மந்தம் (The Proposal)

5) வான்யா மாமா (Vanga angle)    (…….)

39. படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கு



1) கிரேக்கத்துக்குரியது

2) உரோமித்குரியது

3) மத்திய காலத்திற்குரியது

4) எலிசபெத் காலத்திற்குரியது

5) மறுமலர்ச்சிக் காலத்திற்குரியது

(…….)

40. படத்தில் காட்டப்பட்டுள்ள நாடகம்.



1) அன்ரிக் கனி

2) இடிப்பஸ்

3) லியர் மன்னன்

4) இராவணேசன்

5) அத்தைத்திங்கள்

(…….)

(1x4=40 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

## பகுதி II

➢ **பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.**

### உப பகுதி – A

01. i) ‘கலை’ என்றால் என்ன என்பதனை பொருத்தமான எண்ணக்கரு ஒன்றின் முன்வைப்பினூடாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

ii) மேலைத்தேய – கீழைத்தேய கலைக்கோட்பாடுகளின் உட்பொருளை ஒப்பு நோக்குக. *(05 புள்ளிகள்)*

iii) கலைக்கும் கைவினைக்கும் இடையிலான வேறுபாட்டை பட்டியற்படுத்துக. *(05 புள்ளிகள்)*

02. i) அரிஸ்டோட்டில் கூறும் அரங்கின் மூலக்கூறுகளை சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

ii) கிரேக்க ரஜடியுடன் கொமடி நாடகங்களை ஒப்பிட்டு விளக்குக. *(10 புள்ளிகள்)*

03. மத்திய கால ‘ஊர்தி அரங்கு’ மற்றும் ‘மலையக காமன் கூத்தரங்கு’ (காமன் பொட்டல்) என்பவற்றில் மேல்வருவன அமையும் முறைமையை விளக்குக.

i) ஆற்றுகை வெளி

ii) ஆற்றுகை முறைமை

iii) பார்ப்போர் துலங்கல் (5x3=15 புள்ளிகள்)

### உபபகுதி B

agaram.lk

04. எலிசபெத்கால இங்கிலாந்தின் அரங்கப் பண்புகளை, ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் பிரதிபலிப்பதனை அவரது எழுத்துருக்களை உதாரணமாக கொண்டு விளக்குக. *(15 புள்ளிகள்)*

05. நாடகத் தோற்றத்துக்கேதுவாக அமைந்த சடங்குப் பின்புலங்களையும், நவீன நாடகங்களின் நிகழ்த்துகை நுட்பமாக அமையும் சடங்குப் பிரயோகங்களையும் விளக்குக.

06. பின்வருவனவற்றுள் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

*1)* கதாசிஸ்

*2)* சற்றயர்

*3)* ஒப்பேரா

*4)* காவியபாணி அரங்கு

*5)* கண்ணுக்குத் தெரியாத அரங்கு (5x3=15 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணை பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 5th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| நாடகமும் அரங்கியலும் - II<br>Drama & Theater - II | Three Hours<br>Gr. 13 (2022) | 58 | T | II |

## பகுதி – I

➢ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும், பொருத்தமானதுமான விடையை தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தினை அடைப்புக் குறியினுள் எழுதுக.**

01. செவி வழி நுழையும் ஒலி, இசை, உரை ஆகியவை இணைந்த கலை வடிவம் யாது?
 (1) சினிமா  (2) மேடை நாடகம்  (3) ஒப்பேரா
 (4) பலே  (5) வானொலி நாடகம்  (…….)

02. நாடகக் கலையின் பிரதான நோக்கம்.
 (1) பார்ப்போருக்கு அறிவையும் ஞானத்தையும் ஏற்படுத்தல்.
 (2) பார்ப்போரிடையே ரச உணர்வை ஏற்படுத்துதல்.
 (3) மேடையில் சம்பவங்களை செய்து காட்டுதல்.
 (4) கலைஞர்களின் பிரத்தியேக ஆற்றலைக் கட்டுதல்
 (5) பார்ப்போருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துதல்.  (…….)

03. கலையில் இருந்து கைவினை வேறுபடுவதற்கான அடிப்படையான வேறுபாடு.
 (1) மனித திறனின் வெளிப்பாடு
 (2) அழகுடன் காணப்படுதல்
 (3) மீள்படைப்பு செய்யப்பட முடியாமை
 (4) பிறிதொரு பொருளை மூலகமாக பயன்படுத்துதல்
 (5) கற்பனையுடன் கூடியது.  (…….)

04. பின்வருவனவற்றில் ‘ஆக்கும் கலை’ என்ற வரையறைக்குட்படாதது.
 (1) ஓவியம்  (2) சிற்பம்  (3) இலக்கியம்  (4) இசை  (5) கட்டடம்
 (…….)

05. உலகின் முதல் நெறியாளர் என கொள்ளப்படுபவர்.
 (1) மெனிங்சன் பிரபு  (2) ஷேக்ஸ்பியர்  (3) ஸ்ரனிஸ்லவஸ்கி
 (4) எமிலிஜோலா  (5) பீற்றர் புறூக்  (…….)

06. “பார்ப்போர் வெறும் பார்ப்போராக இல்லாது செயல் முனைப்புடன் பங்கு கொள்பவராக மாற வேண்டும்” எனக் கூறியவர்.
 (1) ஸ்ரனிஸ்லவஸ்கி  (2) குறொட்டோவ்ஸ்கி  (3) பரதர்
 (4) அகுஸ்தோபோல்  (5) றிச்சட்செக்னர்  (…….)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

07. நாடகவாக்கம் பற்றி எழுதப்பெற்ற இரண்டு சமஸ்கிருத நூல்கள் எவை?
(1) தொல்காப்பியம், கவிதை இயல் (2) கவிதை இயல், நாட்டிய சாஸ்திரம்
(3) நாடகவியல், மதங்க சூடாமணி (4) தசரூபகம், நாடகவியல்
(5) நாட்டிய சாஸ்திரம், தசரூபகம் (.......)

08. நடிப்புக்கான நுட்பமுறையாக 'முறைமை' (The System) என்பதை அறிமுகம் செய்தவர்.
(1) பிரக்ட் (2) அகஸ்தோபோல் (3) ஸ்ரனிஸ்லவஸ்கி
(4) இப்ஸன் (5) குறொட்டோவ்ஸ்கி (.......)

09. அரங்கை சமுகத்தளை, உளவியல் தளைநீக்கத்துக்கான ஒன்றாக வடிவமைத்தவர்.
(1) பிரக்ட் (2) பீற்றர் புறூக் (3) அகஸ்தோபோல்
(4) சாமுவேல் பெக்கட் (5) குறொட்டோவ்ஸ்கி (.......)

10. 'மகாபாரதத்தினை' ஒன்பது மணிநேர நாடகமாக தயாரித்த அமெரிக்க நாடக நெறியாளர்.
(1) அரியான் ம்நூக்சின் (2) றிச்சாட் செக்னர் (3) பிரக்ட்
(4) பீற்றர் புறூக் (5) மேயஹோல்ட் (.......)

11. பிறிதொரு நாடக ஆசிரியரின், நாடகமொன்றினை நெறியாள்கை செய்யும் நெறியாளன் அந்த நாடக எழுத்துரு தொடர்பாக மீற முடியாதது.
(1) எழுத்துருவை சுருக்குதல் (2) சில பாத்திரங்களை தவிர்த்தல்
(3) கற்பனையை பயன்படுத்தி செயல் வடிவம் கொடுத்தல்
(4) நாடக கருவை மாற்றி அமைத்தல் (5) காட்சிகளின் ஒழுங்கினை மாற்றுதல்
(.......)

12. "புனிதத் தன்மையின்பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பு 'சடங்கு' ஆகும்" எனக் கூறியவர்.
(1) பக்தவத்சல பாரதி (2) ஜோர்ஜ் தொம்சன் (3) றிச்சாட் சதேன்
(4) பேரா. கா. சிவத்தம்பி (5) பேரா. எதிரிவீர சரச்சந்திரா (.......)

13. பின்வருவனவற்றில் கலையரசு சொர்ணலிங்கம் எழுதிய நாடகம்.
(1) பாதுகாபட்டாபிஷேகம் (2) வாணிபுரவணிகன் (3) நல்லதங்காள்
(4) சந்திர ஹரி (5) சாரங்கதாரா (.......)

14. பின்வரும் கூற்றுக்களை கருதுக.
அ) மக்கள் எதிர்நோக்கிய நடப்பியல் பிரச்சினைகளை பேசியது
ஆ) பம்மல் சம்மந்த முதலியாரை பின்பற்றியமை
இ) மத்தியதர வர்க்க படித்த அரச உத்தியோகத்தரை பயன்படுத்தியது.
ஈ) யாழ்ப்பாண பேச்சு மொழியை நாடக உரையாடல்களுக்கு பயன்படுத்தியமை
உ) சமூக, அரசியல் விமர்சனங்களை நாடகத்தில் புகுத்தியது.
இக்கூற்றுக்களில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் நாடகச் செயற்பாடுகளுடன் தொடர்புபடுவது
(1) அ, ஆ, இ (2) அ, இ, ஈ (3) அ, ஆ, உ
(4) அ, ஆ, ஈ (5) அ, ஈ, உ (.......)

15. கூத்துக்களில் காட்சிவிதானிப்பு பயன்படுத்தப்படாமைக்கான காரணமாக கொள்ளத்தக்கது.
(1) அதிக நிதிச் செலவை ஏற்படுத்தும் என்பதனால்
(2) கூத்து பாடி நடிக்கும் வடிவம் என்பதனால்
(3) கூத்தின் அரங்க வெளியில் பார்ப்போர் சுத்திவர அமர்ந்திருப்பதனால்
(4) புராண இதிகாச கதைகளை நிகழ்த்துவதனால்
(5) காட்சிவிதானிப்பு பற்றிய அறிவில்லாமையால் (.......)


agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

16. பின்வரும் நாடகங்களில் கூத்துக்களை அடிப்படையாக கொண்ட பரீட்சார்ந்த நாடகமாக கொள்ள முடியாதது.
(1) அற்றைத் திங்கள் (2) கந்தன் கருணை (3) சங்காரம்
(4) உயிர்த்த மனிதர் கூத்து (5) கொல் ஈனுங் கொற்றம் (…….)

17. இராவணேசன் நாடகத்தில் "துன்றிடும் பெண்ணை விட்டு தொழுது வாழ்" எனக் கூறும் பாத்திரம்
(1) இராமன் (2) கும்பகர்ணன் (3) மண்டோதரி
(4) இந்திரஜித் (5) அங்கதன் (…….)

18. பின்வரும் நாடகங்களில் 'பெண்ணியம்' தொடர்பான கருப்பொருளைக் கொண்டு ஈழத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்கள்
(1) கரூழியம், விழிப்பு (2) சக்தி பிறக்குது, கூர்
(3) ஏகலவன், கத்தன் கருணை (4) பொறுத்ததுபோது, மானிடமென்பது புல்லோ
(5) சங்காரம், காலம் சிவக்கிறது (…….)

19. கோடை நாடகத்தில் பேசப்படுகின்ற "சங்கீதம் ஒன்று சகல உலகிற்கும் வெள்ளையர்கள் என்றால் மிருகங்கள் அல்லவே" எனக் கூறும் பாத்திரம்.
(1) மாணிக்கம் (2) பஞ்சையர் (3) விதானை
(4) சோமு (5) செல்லம் (…….)

20. பின்வருவோரில் கீழைத்தேசத்து அரங்கியல் உத்திகளை தமது நவீன நாடகங்களில் பயன்படுத்தி ஐரோப்பிய நெறியாளர்கள்
(1) ஸ்ரனிஸ்லவஸ்கி – ஷேக்ஸ்பியர்
(2) அகஸ்தோபோவாஸ் - சாமுவேல் பெக்கட்
(3) பிரக்ட் - பீற்றர் புறூக்
(4) மேய ஹோல்ட் - அன்ரோ அன்ரோயின்
(5) இப்ஸன் - ஸ்ரனிஸ்லவஸ்கி

21. மத்திய காலத்தில் நாடகங்களை எழுதிய நாடக ஆசிரியர்.
(1) ஷேக்ஸ்பியர் (2) றொஸ்விதா (3) ஜோன் லிலி
(4) செனேக்கா (5) லோப்போ டிவேக்கா (…….)

22. இலங்கையில் 70 களில் நவீன நாடக நெறியாளர்கள் தோற்றம் பெறுவதற்கு காரணமான 'மக்கன்ரையர்' என்ற நாடகவியலாளர்.
(1) பிரான்சை சேர்ந்தவர் (2) லண்டனை சேர்ந்தவர் (3) இலங்கையை சேர்ந்தவர்
(4) இந்தியாவை சேர்ந்தவர் (5) சுவிற்சிலாந்தை சேர்ந்தவர் (…….)

23. காளிதாசரின் 'சாகுந்தலம்' நாடகத்திற்கான மூலக்கதை அமைந்திருப்பது.
(1) இராமாயணத்தில் (2) சிவபுராணத்தில் (3) மகாபாரதத்தில்
(4) கந்தபுராணத்தில் (5) மேக தூதத்தில் (…….)

24. அம்பலத்தாடிகளின் 'கந்தன் கருணை' நாடகம் வெளிப்படுத்தும் கருப்பொருள்
(1) முருகன் பக்தி (2) சாதிய ஒடுக்கு முறை (3) முதலாளித்துவ எதிர்ப்புணர்வு
(4) மூடப்பக்தி முறைகள் (5) தமிழர் அடக்கு முறை (…….)

25. ஈழத்தில் மேடையேற்றப்பட்ட பின்வரும் நாடகங்களில் மொழி பெயர்ப்பு நாடகம்.
(1) எந்தையும் தாயும் (2) காலம் சிவக்கிறது (3) ஏணிப்படிகள்
(4) யுக தர்மம் (5) ஐயா எலக்சன் கேட்கிறார் (…….)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

26. பின்வரும் கூற்றுக்களில் 'லியர் மன்னன்' நாடகம் பேசும் விடயங்களுடன் தொடர்புபடாதது.
    (1) வெளித்தோற்றத்தை கண்டு ஏமாரக் கூடாது.
    (2) புகழ்ச்சியை விரும்புபவர்கள் உண்மைகளை உணரத்தவறுகின்றனர்.
    (3) துரோகம் செய்ய நினைப்பவர்கள் அழிந்து போவார்கள்.
    (4) முதுமையில் தனிமை கொடுமையானது.
    (5) கடவுளை நம்பாதவர் அழிந்து போவர். (.......)

27. தமிழ் நாட்டில் சுதந்திரத்திற்குப்பின் நாடகத்தினை சமூக சீர்திருத்த வடிவமாக பயன்படுத்திய நிறுவனம்.
    (1) சுகுணவிலாச சபை (2) பாலர்விணோத சபை (3) திராவிடக்கழகம்
    (4) வித்தியாத வினோத சபா (5) அ.தி.மு.க. கட்சி (.......)

➢ **இடிப்பஸ் மன்னன் நாடகத்தில் வருகின்ற பின்வரும் உரையாடலை அடிப்படையாகக் கொண்டு 28, 29, 30 ஆம் வினாக்களுக்கு விடை அளிக்குக.**
"அவர் கொலை செய்யப்பட்டார், அறியப்படாத கொலையாளியை நாம் நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்பதே கடவுளர்களின் கட்டளையின் தெளிவான வடிவமாகும்"

28. இக்கூற்றினை பேசும் பாத்திரம்.
    (1) தெய்ரீரியஸ் (2) கிறியோன் (3) செய்தியாளன்
    (4) இடிப்பஸ் (5) கோரஸ் (.......)

29. மேற்படி கூற்றின்படி கொலை செய்யப்பட்டவர்.
    (1) கட்மஸ் (2) இடிப்பஸ் (3) சியுஸ்
    (4) லேயஸ் (5) பொலிபஸ் (.......)

30. அறியப்படாத கொலையாளியாக சுட்டப்படுபவர்.
    (1) கிறியோன் (2) அன்ரிக்கனி (3) இடிப்பஸ்
    (4) பொலிபஸ் (5) எத்தியோகிளிஸ் (.......)

31. சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய 'அல்லியம்' என்னும் ஆடல் ஆற்றுகையின் பிரதான கதாபாத்திரம்.
    (1) சிவன் (2) காமன் (3) இந்திராணி (4) பலராமன் (5) விஷ்ணு
    (.......)

32. ஈழத்தில் வடமோடி – தென்மோடி கூத்துக்கள் நிகழ்த்தப்படுகின்ற பிரதேசங்கள்.
    (1) மலையகம், வன்னி (2) மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் (3) மன்னார் - மட்டக்களப்பு
    (4) யாழ்ப்பாணம், வன்னி (5) மலையகம், மட்டக்களப்பு (.......)

33. பின்வருவனவற்றில் சி. மௌன குருவின் நூல் அல்லாதது.
    (1) மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள்
    (2) ஈழத்து தமிழ் நாடக அரங்கு
    (3) கூத்த யாத்திரை
    (4) ஈழத்து இசை நாடக வரலாறு
    (5) பழையதும் புதியதும் (.......)

34. பின்வருவனவற்றில் விஜயன் - குவேனி திருமணத்துடன் தொடர்புடைய ஐதீகத்தினைக் கொண்ட சிங்களச் சடங்கு
    (1) சன்னியக்கும (2) ரட்டயக்கும (3) ஹொகம்ப கங்காரிய
    (4) வடிகபட்டுன (5) தொவில் (.......)

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

35. பின்வரும் தென்னிந்திய சினிமா நடிகர்களில் இன்றும் நாடகத்துறையுடனும் சேர்ந்து இயங்குகின்ற நடிகர்.
(1) கமல்ஹாசன் (2) நாசர் (3) ராதாரவி
(4) சத்திய ராஜ் (5) சரத்குமார் (.......)

36. இவ்வருடம் 'நாடகமும் அரங்கியல்' பாடத்துறையில் தமிழில் தேசிய ரீதியாக அரச அங்கீகாரத்துடன் 'கல்வியியல் நெறியாக' ஆரம்பித்துள்ள நிறுவனம்
(1) கொழும்பு பல்கலைக்கழகம்
(2) திருமறைக் கலாமன்றம்
(3) ரவர் அரங்க மன்றம்
(4) யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
(5) தேசிய கல்வி நிறுவனம் (.......)

37. இப்படத்தில் உள்ள, இவ்வருடம் மறைந்த உலகப் புகழ்பெற்ற அரங்கியலாளர்.



(1) பேரா. இராமானுஜம்
(2) றிச்சாட் செக்னர்
(3) பீற்றர் புறூக்
(4) குறொட்டோவ்ஸ்கி
(5) யூலியன் பெக் (.......)

38. அருகில் உள்ள இப்படத்தில் காணப்பெறும் வேடமுகம்.



(1) கிரேக்கம்
(2) உரோம்
(3) யப்பான்
(4) இந்தியா
(5) இத்தாலி (.......)

39. கடந்த வருடம் நூற்றாண்டை நினைவு கூர்ந்த ஈழத்துப் படைப்பாளி.



(1) பேரா. க. கணபதிப்பிள்ளை
(2) பேரா. சு. வித்தியானந்தன்
(3) மகாகவி. உருத்திர மூர்த்தி
(4) கலையரசு சொர்ணலிங்கம்
(5) நடிகமணி வைரமுத்து (.......)

40. அருகில் உள்ள ஒளிமுதலின் பாவனையில்



(1) அரங்கு முழுவதையும் ஒளிர்விக்கலாம்
(2) சைக்ளோறாமாவை வர்ணப்படுத்தலாம்
(3) காட்சிகளைக் காட்டலாம்
(4) குறிப்பிட்ட சூழலை குவிவுபடுத்தலாம்
(5) புகையைப் பிரயோகிக்கலாம்

(.......)
(40x1 = 40 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

## பகுதி - II

- **உப பகுதி A இலிருந்து இரண்டு வினாக்களையும் உப பகுதி B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக**

### உப பகுதி A
**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

1. உலகப் புகழ் பெற்ற ரஜடி நாடகமாக 'இடிப்பஸ் மன்னன்' நாடகம் கொள்ளப்படுகின்றது.
   i) இடிப்பஸ் மன்னன் நாடகத்தினை ஒரு சிறந்த ரஜடி நாடகமாக கொள்வதற்கான ஆதாரங்களை முன்வைக்குக. *(7 புள்ளிகள்)*
   ii) இடிப்பஸ் மன்னன் நாடக எழுத்துருவினூடாக வெளிப்படும் சமூக பண்பாட்டுப் பெறுமானங்களை ஆராய்க. *(8 புள்ளிகள்)*

2. i) 'கோடை' நாடகத்தின் பாடுபொருளை விபரிக்குக. *(5 புள்ளிகள்)*
   ii) கோடை நாடகத்தில் வருகின்ற மாணிக்கம் - செல்லம் என்ற பாத்திரங்களின் முரண்படும் உளப்பாங்குகளை விளக்குக. *(5 புள்ளிகள்)*
   iii) கோடை நாடக எழுத்துருவை அடிப்படையாக கொண்டு சுதேச கலைகளில் பிரித்தானிய ஆட்சி ஏற்படுத்திய தாக்கங்களை கூறுக. *(5 புள்ளிகள்)*

3. i) இந்திய மரபில் மார்க்க – தேசி ஆகிய மரபுகளை விளக்குக. *(5 புள்ளிகள்)*
   ii) 'அபிக்ஞான சாகுந்தலம்' நாடகத்தில் 'மார்க்க' மரபின் பண்புகளை இனங்கண்டு விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

### உபபகுதி B
**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

4. கூத்து வடிவத்தினை ஊடகமாகக் கொண்டு தயாரிக்கபட்ட நாடகமே 'இராவணேசன்' என்பர் இராவணேசன் நாடக சிறப்பில் கூத்துக் கலை வடிவத்தின் பங்களிப்பினை ஆராய்க.

5. 'நாடகம் சமூக அரசியல் சூழமைவுகளை சித்திரிக்கும் வடிவம் என்பார்கள்' அதற்கேற்ப ஈழத்தில் எழுந்த 'கந்தன் கருணை' 'மண் சுமந்த மேனியர்' 'உயிர்த்த மனிதர் கூத்து' போன்ற நாடகங்கள் அல்லது அவையை ஒத்ததாக நீர் அறிந்த 3 நாடகங்கள் வெளிப்படுத்தும் சமுக அரசியல் நிலமைகளை ஆராய்க.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1) தெருக்கூத்து
   2) நொண்டி நாடகம்
   3) இசை நாடகம்
   4) நாடக அரங்க கல்லூரி
   5) திருமறைக் கலாமன்றம் *(5x3=15புள்ளிகள்)*



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk